உங்கள் முகவரியை உலகறிய செய்கின்றோம்.
டைம்ஸ் ஆப் திருப்புத்தூர்
>>> உங்கள் வணிகத்தை புதிய அடையாளமாக உயர்த்தி காட்டுகிறோம். <<<
Online Paper Advertisement
Social Media Promotion
Video Ad Promotion
அழையுங்கள் 97505 05151
Times of Thirupputhur | www.timesofthirupputhur.com | timesofthirupputhur

டைம்ஸ் ஆப் திருப்புத்தூர்
"யாதும் ஊரே யாவரும் கேளிர்"
இணைய நாளிதழ்

தான்வி கிளினிக்
THANVI CLINIC
எலும்பு, மூட்டு மற்றும் குழந்தைகள் நல மையம்
Dr.K.நாகேந்திரன் M.B.B.S.,M.S D.N.B (Ortho) எலும்பு முறிவு மூட்டு அறுவை சிகிச்சை நிபுணர்
Dr.J.பூர்ணிமா M.B.B.S.,M.D (Pediatrics) குழந்தைகள் நல மருத்துவர்
டிஜிட்டல் X-RAY
தொடர்புக்கு 90425 38600
லேப் வசதி உள்ளது

மலர் - 5 இதழ் - 203 ஞாயிற்றுக்கிழமை 15-03-2026 ஆன் லைன் இலவச பிரதி

## திருப்புத்தூர்

# கிறிஸ்துராஜா பள்ளியில் மழலையர் வகுப்பு மாணவர்களுக்குப் பட்டமளிப்பு விழா





















திருப்புத்தூர் மார்ச் :14

சிவகங்கை மாவட்டம்

திருப்புத்தூர் கிறிஸ்துராஜா மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளியில் யுகேஜி மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா நடைபெற்றது. கிறிஸ்துராஜா பள்ளியின் முன்னாள் மாணவர்கள் இசை அருள் ஸ்டாலின் மற்றும் அவரது துணைவியார் டாக்டர் கிப்டா ஜெயபியூலா சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். எல்கேஜி மாணவர்கள் அபிலாஷினி, பிருந்தன் மற்றும் சுபியாஷினி பள்ளி வழிபாடு நடத்தினர். யுகேஜி மாணவர்கள் ஜஸ்ரியா, சையது ரசீல் மற்றும் எல்கேஜி மாணவி வேதாஶ்ரீ ஆகியோர் திருக்குறள் ஒப்புவித்தனர். எல்கேஜி மாணவர் ஷஷாந்த் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். எல்கேஜி மாணவர்கள் வரவேற்பு நடனம் ஆடினர். எல்கேஜி மற்றும் யூகேஜி மாணவர்கள் மொபைல் போன் மோகத்திற்கு அடிமையாவதால் ஏற்படும் தீய விளைவுகள் பற்றி நாடகத்தின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

சிறப்பு விழுந்தினர்கள் குழந்தை வளர்ப்பு பற்றிப் பெற்றோர்களுக்குத் தெளிவாக எடுத்துரைத்தனர். பின்னர் யுகேஜி மாணவர்கள் பட்டமளிப்பு விழா சிறப்பு நடனமாடினர். யுகேஜி மாணவி தர்ஷிகா இரண்டு வருடங்களாகத் தாங்கள் கற்ற கல்வி அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். பின்னர் யுகேஜி மாணவர்கள் பட்டமளிப்பு விழா நடனமாடினர். நிறைவாக சிறப்பு விருந்தினர்கள் யுகேஜி மாணவர்களுக்குப் பட்டமளிப்பு விழாச் சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தனர். பள்ளித் தலைவர் விக்டர் சிறப்பு விருந்தினர்களை வாழ்த்தி கௌரவித்தார். விழா நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கிய அம்ரிதா, அப்ரீதா இருவரையும் பாராட்டி கௌரவித்தார். யுகேஜி மாணவி தன்சிகா நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை மழலையர் வகுப்பு ஆசிரியைகள் ஆயிஷா மற்றும் தனுஷா தேவி ஒருங்கிணைத்து சிறப்பாகச் செய்திருந்தனர்.



## திருப்புத்தூரில்

# ஓபிஎஸ் அணியில் இருந்து கூண்டோடு விலகி அதிமுகவில் இணைந்தனர்!

### முன்னாள் எம்எல்ஏ பொன்னாடை அணிவித்து வரவேற்பு!



திருப்புத்தூர் மார்ச் : 14

சிவகங்கை மாவட்டம் திருப்புத்தூர் அண்ணா சிலை அருகே முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் எம் ஜி ஆர் மன்ற மாநில இணைச் செயலாளருமான கே.கே. உமாதேவன் தலைமையில் அதிமுக மாவட்ட அவைத்தலைவர் ஏவி. நாகராஜன், ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், வடிவேல், ராஜா, நகர செயலாளர் இப்ராம்ஷா ஆகியோர் முன்னிலையில் அதிமுக உரிமை மீட்பு குழு (ஓபிஎஸ் அணியின்) ஒன்றிய செயலாளர்கள் நாகராஜன், தேவேந்திரன், நகர செயலாளர் சந்திரசேகரன், அவைத்தலைவர் ராம.ராசு மற்றும் திருப்புத்தூர் வடக்கு, கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட இளையாத்தங்குடி, சுக்காம்பட்டி, வஞ்சினிபட்டி, பிள்ளையார்பட்டி, சுண்ணாம்பிருப்பு, தெக்கூர், ஒழுகமங்கலம், சிறுகூடல்பட்டி, ஓ.சிறுவயல், என் . புதூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் ஓபிஎஸ் அணியில் இருந்து கூண்டோடு விலகி அதிமுகவில் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் அணி துணைச் செயலாளர் நேமம் செல்லப்பாண்டி தலைமையில் சாக்கோட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த அரவிந்த், பழனிக்குமார், கருப்பையா, வெங்கடேஷ், சபரீஷ், ஹரிபிரசாத் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட இளைஞர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், மாநில எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளருமான கே.கே.உமாதேவன் முன்னிலையில் தங்களை அதிமுகவில் இணைத்து கொண்டனர். அவர்களுக்கும் பொன்னாடை போற்றி வரவேற்றனர். இந்த நிகழ்ச்சியில் அதிமுக பொதுக்குழு உறுப்பினர் கரு.சிதம்பரம், இளைஞர் இளம்பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் பிரபு, வழக்கறிஞர் அணி ராஜசேகரன், ஜெ பேரவை ஒன்றிய செயலாளர் காட்டாம்பூர் ரமேஷ், ஒன்றிய துணைச் செயலாளர் ஆறுமுகம், நகர ஜெ பேரவை செயலாளர் கோபாலகிருஷ்ணன், நகர அவைத் தலைவர் செல்லப்பாண்டியன், இளைஞர் இளம்பெண்கள் பாசறை மாவட்ட துணைத் தலைவர் பொண்ணுத்தேவன், மாணவரணி இளமுருகு, மாவட்ட இளைஞரணி துணைத்தலைவர் சக்திவேல், நகர பாசறைச் செயலாளர் சதீஷ், பேச்சாளர் சேது, முன்னாள் நகரச் துணை செயலாளர் இரா.சந்திரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் நவநீதகிருஷ்ணன், வார்டு செயலாளர் சீனிவாசன், கருமிச்சாம் பட்டி சாத்தையா மற்றும் அதிமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



காரைக்குடி ஸ்ரீ லலிதா முத்துமாரி அம்மன் மாசி பங்குனி பால்குடத் திருவிழாவை முன்னிட்டு, பக்தர்களின் பால்குடம் செல்லும் சாலைகளை, காரைக்குடி மாநகர மேயர் (பொ) நா.குணசேகரன் முன்னெடுப்பின்படி, காரைக்குடி மாநகர கமிஷனர் சங்கரன் மற்றும் நகராட்சி ஊழியர்கள் பராமரிப்பு பணியினை மேற்கொண்டு, சாலைகளை சீர் செய்தனர்.

# சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரிக்கு பசுமை சாதனையாளர் விருது



காரைக்குடி மார்ச் :14

சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமானது சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகிலுள்ள விசாலயன்கோட்டை, கலாம் கவி கிராமத்தில் செயல்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தால் வழங்கப்படும் பசுமை சாதனையாளர் விருதிற்காக, கல்லூரியின் தாளாளர் முனைவர் சேது குமணன் மற்றும் முதல்வர் முனைவர் சு. முரளி கிருஷ்ணசாமி அவர்களின் வழிகாட்டுதலின்படி அறிக்கைதயார் செய்யப்பட்டு சிவகங்கை மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்விருதானது தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக சிறப்பாக செயல்படும் தனிநபர் மற்றும் நிறுவனங்களை பாராட்டுவதற்காக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தால் வழங்கப்படும் விருதாகும்.

இவ்விருதிற்காக:

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு,

மரக்கன்றுகள் நடுதல்,

திடக்கழிவு மேலாண்மை,

நீர் பாதுகாப்பு மற்றும் நீர்நிலைகளைப் பாதுகாத்தல்

பிளாஸ்டிக் கழிவு கட்டுப்பாடு,

காலநிலை மாற்றத்தைச் சமாளிக்கும் முறைகள்

என்ற தலைப்பில் அறிக்கை தயாரிக்கப்பட்டு சிவகங்கை மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் கோவிந்தராஜன், முனைவர் பா. கவிதா மற்றும் முனைவர் அ. கவியரசு அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகளில் சிறப்பாகச் செயல்பட்டதற்காக, இந்த ஆண்டிற்கான பசுமை சாதனையாளர் விருதானது சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரிக்கு கிடைத்துள்ளது. இதனை ஊக்குவிக்கும் விதமாக கல்லூரிக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசுத்தொகை ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலையை கல்லூரி நிறுவனத்தின் சார்பாக முனைவர் சே. கண்மணி சுப்பிரமணியன், கோவிந்தராஜன், முனைவர் பா. கவிதா, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் க. பொற்கொடி அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

விருது பெற்றதைத் தொடர்ந்து, கல்லூரி நிர்வாகம், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். மேலும் எதிர்காலத்திலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் விவசாய முன்னேற்றத்திற்கு பல்வேறு பசுமைத் திட்டங்களைத் தொடர்ந்து மேற்கொள்வோம் என்று கல்லூரியின் தாளாளர் முனைவர் சேது குமணன் உறுதி தெரிவித்தார்.



காரைக்குடி அருகே கோவிலூர் பைபாஸ் (கெமிக்கல் அருகே ) ராமேஸ்வரம் திருச்சி தேசிய நெடுஞ்சாலையில், ராமேஸ்வரத்திலிருந்து வந்த ஆந்திராவைச் சேர்ந்த 20 பேர் கொண்ட வேன், மதுரையிலிருந்து வந்த காரின் மீது மோதி தலை குப்புற கவிழ்ந்து பெரும் விபத்துக்குள்ளானது. இதில் வேனில் பயணித்த 20 பேரும் மற்றும் காரில் பயணித்த மூன்று பேருக்கும் காயங்கள். காயமடைந்த பயணிகள் அனைவரும் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.






# சிங்கம்புணரி நகர் பகுதியில் குற்றங்களை தடுக்க சேவுகா அரிமா சங்கம் சார்பில் வழங்கப்பட்ட சிசிடிவி கேமராக்கள்

சிங்கம்புணரி மார்ச் :14

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி நகர் பகுதியில் நடக்கும் குற்றங்களை தடுக்க சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத்,

அறிவுறுத்துதலின்படி

திருப்புத்தூர் காவல் துணை கண்காணிப்பாளர் செல்வகுமார் மேற்பார்வையில் சிசிடிவி கண்காணிப்பு கேமரா பொறுத்த சேவுகா அரிமா சங்கத்திடம் சிங்கம்புணரி போக்குவரத்து காவல் சார்பு ஆய்வாளர் சேவுகவீரையா சார்பில் பரிந்துரை செய்தார். அதனை ஏற்று சிங்கம்புணரி சேவுகா அரிமா சங்கம் சார்பாக ரூ 50 ஆயிரம் மதிப்புள்ள கண்காணிப்பு கேமரா சிங்கம்புணரி பேருந்து நிலையம் அண்ணா சிலை எதிரில் பொருத்தப்பட்டு இன்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.




இந்த நிகழ்வில் அரிமா சங்க நிர்வாகிகளுக்கு போக்குவரத்து காவல் சார்பு ஆய்வாளர் சேவுக வீரையா பொன்னாடை போர்த்தி கௌரவப்படுத்தினார். சேவுக அரிமா சங்கம் சார்பில் போக்குவரத்து காவல் சார்பு ஆய்வாளருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவபடுத்தினர். இதில் சேவுகா அரிமா சங்க நிர்வாகிகள், போக்குவரத்து காவலர்கள் கலந்து கொண்டனர்

# "நான் உங்க தேவா. நம்மோடு சிளம் சார்..." முதல்வருடன் ரீல்ஸ் போட்ட தேவா ஜீவா பிரதர்ஸ்!

சென்னை: 'நான் உங்க தேவா. நம்மோடு சிளம் சார் இணைந்துள்ளார். அவர் சொல்லும் அட்வைஸை எல்லோரும் கேட்பீங்க. அதனால சிளம் சார் நமக்கு அட்வைஸ் கொடுக்கிறார்' என முதல்வர் ஸ்டாலின் உடனான தங்களது சந்திப்பை அழகான கன்டென்டாக மாற்றியுள்ளனர் சிறுவர்களான தேவாவும், ஜீவாவும். இந்த சந்திப்பு முதல்வரின் அலுவலகத்தில் நடந்தது.



பரபரக்கும் அரசு மற்றும் தேர்தல் பணிகளுக்கு இடையே சற்று இளைப்பாறும் வகையில் இன்ஸ்டாகிராம் சமூக வலைதள பிரபலங்களான சகோதரர்கள் தேவா, ஜீவாவை தன் அலுவலகத்தில் சந்தித்து, அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார் முதல்வர் ஸ்டாலின். இந்த சந்திப்பின் போது சிறுவர்களுடனான உரையாடலை சமூக வலைதளத்தில் முதல்வர் ஸ்டாலின் பகிர்ந்துள்ளார்.

அதில் அந்த சிறுவர்கள் குறித்தும், அவர்களின் குடும்பம் மற்றும் சமூக வலைதள வீடியோ குறித்தும் முதல்வர் கேட்டறிந்தார். 'உங்களை உற்சாகப்படுத்த நேரில் அழைத்தேன்' என முதல்வர் ஸ்டாலின் அவர்களிடம் தெரிவித்தார். மேலும், அவர்களின் கனவு குறித்தும் கேட்டறிந்தார். அரசுப் பள்ளியில் படிக்கும் அவர்களிடம் பள்ளியின் செயல்பாடு, காலை சிற்றுண்டி மற்றும் சத்துணவு குறித்து கேட்டறிந்தார். இந்த சந்திப்பில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸூம் பங்கேற்றார். மேலும், சிறுவர்கள் தேவா மற்றும் ஜீவாவின் குடும்பத்தையும் சந்தித்தார்.

முதல்வர் உடன் இன்ஸ்டா ரீல்ஸ்: 'நான் உங்க தேவா. நம்மோடு சிளம் சார் இணைந்துள்ளார். அவர் சொல்லும் அட்வைஸை எல்லோரும் கேட்பீங்க. அதனால சிளம் சார் நமக்கு அட்வைஸ் கொடுக்கிறார்' என தேவா வீடியோவில் இன்ட்ரோ கொடுக்க, "உங்களின் ரீல்ஸ் வீடியோ உருவாக்கம் நன்றாக உள்ளது. அதற்காக எனது வாழ்த்துகள். படிப்பில் கவனம் செலுத்தவும். நீங்கள் சொன்னது போல உங்கள் கனவுப் பணியான ஆட்சியர், காவல் அதிகாரியாக வாழ்த்துகிறேன். உங்கள் கனவு நிறைவேற வேண்டும்" என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

# உணவகம், டீக்கடைகளின் கூடுதல் மின் நுகர்வில் யூனிட்டுக்கு ரூ.2 மானியம்: தமிழக அரசு அறிவிப்பு

சென்னை: 'உணவகங்கள், டீக்கடைகள், கிளவுட் கிச்சன் உள்ளிட்ட உணவு உற்பத்தி தொழிற்கூடங்கள் எரிவாயுவுக்கு (லிறிநி) பதிலாக மின் அடுப்புகளை பயன்படுத்தும்போது ஏற்படும் கூடுதல் மின்சார நுகர்வுக்கு, யூனிட் ஒன்றுக்கு ரூ.2 மானியம் வழங்கப்படும். ஒன்றிய அரசு அறிவித்துள்ள வணிக எரிவாயு பயன்பாட்டுக் கட்டுப்பாடுகள் அமலில் இருக்கும் காலம் வரை இந்த மானியம் வழங்கப்படும்' என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: 'வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள போர்ச்சூழல் காரணமாக தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள எரிவாயு (லிறிநி) தட்டுப்பாட்டு இடர்பாடுகளை நீக்கி தொழில் துறை, உணவுப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு துறையினரின் தொழில் சீராக நடைபெற எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முதல்வர் ஸ்டாலின் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கடந்த மாதம் பிப்ரவரி 28 அன்று அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கூட்டுப்படைகள் ஈரான் மீது போர் தொடுத்தன. இதனைத் தொடர்ந்து ஈரான் அரசால் ஹொர்முஸ் (பிஷீக்ஷீனீuக்ஷ) ஜலசந்தியின் வழியாக செல்லும் கப்பல்கள் தடை செய்யப்பட்டது.

இதன் காரணமாக இந்தியாவிற்கு வளைகுடா பகுதியிலிருந்து வரும் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு தடைப்பட்டது. தமிழ்நாட்டில் எரிவாயு (லிறிநி) தட்டுப்பாடு தொடர்பாக மார்ச் 10 ஆம் தேதி முதல்வர் தொடர்புடைய துறைகளுக்கு அறிவுரை வழங்கினார். இப்பிரச்சினை தொடர்பாக, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் மார்ச் 11ஆம் தேதி தொழில் மற்றும் வர்த்தக கூட்டமைப்பு சங்கங்கள், ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் சங்க பிரதிநிதிகளுடன் கூட்டம் நடத்தப்பட்டது.

இந்த இடர்பாடு தொடர்பாக தலைமைச் செயலாளர் மார்ச் 9, 12,13 ஆகிய நாட்களில் தொடர்புடைய துறைகளின் செயலாளர்களுடன் ஆய்வுக் கூட்டமும் நடத்தப்பட்டது. உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தொழில் மற்றும் வர்த்தக கூட்டமைப்பு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம் ஆகியன பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற கோரினர். இது தொடர்பாக இன்று முதல்வர் தலைமையில் சம்பந்தப்பட்ட அரசு துறையின் உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

உணவகங்கள், டீக்கடைகள், கிளவுட் கிச்சன் உள்ளிட்ட உணவு உற்பத்தி தொழிற்கூடங்கள் எரிவாயுவிற்கு (லிறிநி) பதிலாக மின்அடுப்புகளை பயன்படுத்தும் போது ஏற்படும் கூடுதல் மின்சார நுகர்விற்கு, யூனிட் ஒன்றுக்கு ரூ.2 மானியம் வழங்கப்படும். ஒன்றிய அரசு அறிவித்துள்ள வணிக எரிவாயு பயன்பாட்டுக் கட்டுப்பாடுகள் அமலில் இருக்கும் காலம் வரை இந்த மானியம் வழங்கப்படும்.

எரிவாயு (லிறிநி) பயன்படுத்தும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நெருக்கடியை சமாளிக்கும் வகையில் மின் அடுப்புகள் மின் சூடேற்றிகள் உள்ளிட்ட மின் உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் (ஹிசீணிநிறி) கீழ், 25 சதவிகிதம் / அதிகபட்சமாக 3.75 லட்சம் ரூபாய் மானியத்துடன் கடன் வழங்கவும், தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 25 சதவிகிதம் / 2 லட்சம் ரூபாய் மானியத்துடன் 10 லட்சம் ரூபாய் வரை கடன் வழங்கவும் மற்றும் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் 35 சதவிகிதம் / அதிகபட்சமாக 1 கோடி ரூபாய் வரை மானியத்துடனும் கடன் வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.




தமிழ்நாட்டில் 60,698 தொழிற்சாலைகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணையினை பெற்று, எல்பிஜி., சிஎன்ஜி, டீசல், பர்னஸ் ஆயில், விறகு போன்றவற்றை எரிப்பொருளாக பயன்படுத்தி இயங்கி வருகின்றது. இந்நிறுவனங்கள் எல்பிஜி., சிஎன்ஜி, போன்ற எரிபொருட்களுக்கு மாற்றாக மண்ணெண்ணை, ஆர்டிஎஃப், எச்எஸ்டி, பயோமாஸ் போன்றவற்றை எரிபொருளாக பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும், இதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணை (சிஜிணி/சிஜிளி) பெற தேவையில்லை, தகவல் தெரிவித்தால் மட்டும் போதுமானது எனவும், ஒன்றிய அரசு அறிவித்துள்ள எல்பிஜி., சிஎன்ஜி பயன்பாட்டுக் கட்டுப்பாடுகள் கால அவகாசம் வரை இந்த விலக்கு அமலில் இருக்கும் எனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் 9,300 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக நாள் ஒன்றுக்கு 55 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து கையாளும் திறன் உள்ளது. இந்த இடர்பாட்டினால் மீதமாகும் தேவைக்கு அதிகமான பாலினை பால் உற்பத்தியாளர்களிடமிருந்து ஆவின் பால் கூட்டுறவு சங்கங்களில் கட்டுப்பாடுகள் ஏதுமின்றி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க ஆணையிடப்பட்டுள்ளது. எரிவாயு (லிறிநி) பற்றாக்குறையால் உணவகங்கள் மூடப்படும் வேளையில் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் காய்கறி விற்பனை பாதிக்கப்படலாம்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டு விவசாயிகளை தாங்கள் விளைவித்த காய்கறிகள் மற்றும் பழங்களை இடர்பாடின்றியும், 194 உழவர் சந்தைகளில் எவ்வித கட்டுப்பாடு இல்லாமல் விற்பனை செய்ய அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், மாநில அளவில் வணிக நிறுவனங்களுக்கு முறையாக எல்பிஜி சிலிண்டர் அளவீட்டினை ஒதுக்கீடு செய்து கண்காணிக்க தலைமைச் செயலாளர் அவர்கள் கண்காணிப்பில் அரசு உயர் அலுவலர்கள் கொண்ட குழு செயல்படவும், இதேபோன்று மாவட்ட அளவில் எண்ணெய் விநியோக நிறுவனங்களின் பொறுப்பு அலுவலர்களை உள்ளடக்கிய மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான குழு கண்காணிக்கவும் முதல்வர் ஆணையிட்டுள்ளார்.

இத்துடன், இந்த மாதம் பொது விநியோக திட்டத்திற்கு கூடுதலாக 3228 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



2026 சட்டமன்றத் தேர்தல் விரைவில் அறிவிக்கப்பட உள்ள நிலையில் நேற்று காரைக்குடியில் சிஆர்பிஎப் மற்றும் சிவகங்கை காவல்துறையினர் கொடி அணிவகுப்பு .
விரைவில் 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் பாதுகாப்பு பணிக்காக சிஆர்பிஎப் வீரர்கள் 62 பேர் காரைக்குடி வருகை தந்துள்ளனர் அதுமட்டுமல்லாமல் சிவகங்கை மாவட்ட காவல்துறையினர் 60 பேரும் சேர்ந்து 122 பேர் கொடி அணிவகுப்பு காரைக்குடி கழனிவாசல்,
வஊசி ரோடு, முதல் போலீஸ் பீட் ,அண்ணா சிலை, எம்ஜிஆர் சிலை,பெரியார் சிலை, போன்ற முக்கிய வீதிகள் வழியாகதேவர் சிலை வந்தடைந்தனர்.




# பாஜக கூட்டணிக்கு தயாராகிறதா தவெக? மாவட்டச் செயலாளர்களுடன் அவசர ஆலோசனை

2026 சட்டப்பேரவைத் தேர்தல் களத்தில் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் திருப்புமுனையை ஏற்படுத்தும் கட்சியாகப் பார்க்கப்படுகிறது. தனது முதல் மாநாட்டிலேயே, "கூட்டணி கட்சிகளுக்கு ஆட்சியில் பங்கு" எனும் அதிரடி ஆஃபரை வெளியிட்டார் விஜய். இது திமுக, அதிமுகவுக்கு மாற்றாக ஒரு மெகா கூட்டணிக்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. குறிப்பாக, காங்கிரஸ் தங்களை நோக்கி வரும் என விஜய் நம்பினார். ஆனால், யதார்த்தம் வேறாக அமைந்தது.

காங்கிரஸ் மீண்டும் திமுகவுடனேயே பயணிக்க முடிவு செய்தது, விஜய்யின் ஆரம்பகட்ட வியூகத்துக்குப் பின்னடைவாக அமைந்தது. அதிகாரப் பகிர்வு எனும் துருப்புச்சீட்டு கையில் இருந்தும், ஒரு தேர்தலைக்கூட சந்திக்காத தவெகவின் வாக்கு வங்கி மற்றும் எதிர்காலம் குறித்த ஐயப்பாட்டால், மற்ற கட்சிகள் தவெக பக்கம் தலைவைக்கத் தயங்கின. இது ஒருபுறமிருக்க, சிறிய மற்றும் செல்வாக்கான கட்சிகளைத் தன்பக்கம் இழுக்க தவெக போட்ட திட்டங்களை, பாஜக மேலிடம் மிக சாதுர்யமாக முறியடித்ததாகக் கூறப்படுகிறது.

தற்போது தவெக தலைவரைச் சுற்றி அரசியல் ரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும் பலவாறாக நெருக்கடிகள் சூழ்ந்துள்ளன. கரூர் கூட்ட நெரிசல் வழக்கு தொடர்பான சிபிஐ விசாரணை, 'ஜனநாயகன்' பட வெளியீட்டுச் சிக்கல்கள் மற்றும் குடும்ப விவகாரங்கள் என விஜய் கடுமையான அழுத்தத்தில் இருக்கிறார். அதேசமயம் தவெக தனித்துப் போட்டியிட்டால் அது வாக்கு பிரிப்புக்கு வழிவகுத்து, இறுதியில் திமுக கூட்டணிக்கே சாதகமாக முடியும் என்பதை பாஜகவும் நன்கு உணர்ந்துள்ளது.

இதனைப் பயன்படுத்திக் கொண்டு, தவெகவை தங்கள் பக்கம் இழுக்க பாஜக தீவிரமாக காய் நகர்த்தி வருகிறது. ஏற்கெனவே திரைமறைவில் நடந்த பலகட்ட பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்த நிலையில், தற்போது இறுதி முயற்சியாக பாஜக மீண்டும் ஒருமுறை பேச்சுவார்த்தையைத் தொடங்கியுள்ளது. இந்தச் சூழலில் தான், 'பாஜகவுடன் கூட்டணி அமைக்கலாமா?' என்ற யோசனை விஜய் தரப்புக்கும் வந்திருப்பதாகத் தகவல்கள் கசிகின்றன.

இது குறித்து விவாதிக்க, நேற்று தவெக மாவட்டச் செயலாளர்களுடன் ஆன்லைன் வாயிலாக அவசர ஆலோசனை நடத்தினார் பொதுச்செயலாளர் ஆனந்த். அதில், மாநாட்டில் அறிவித்த 'கொள்கை' மாறாமல் தனித்தே நின்று பலத்தைக் காட்டுவதா அல்லது, தற்போதைய நெருக்கடிகளைச் சமாளிக்க கூட்டணியில் கைகோப்பதா? ஒரு வேளை, பாஜகவுடன் கூட்டணி அமைத்தால், ஏற்கெனவே அவர்களை 'கொள்கை எதிரி' என்று அறிவித்ததற்குப் பொதுமக்களிடம் என்ன பதில் சொல்வது என்பது குறித்தெல்லாம் பலவாறு ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

கூட்டத்தில் பங்கேற்ற மாவட்டச் செயலாளர்களில் சிலர், "புதிதாகக் களம் காண்பதால் கட்சிக்கும், தலைவருக்கும் ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்க்க இப்போதைக்கு பாஜகவுடன் கூட்டணி அமைப்பதே பாதுகாப்பு" என வெளிப்படையாகக் கருத்து தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. எனினும், விஜய் எந்த முடிவெடுத்தாலும் கட்டுப்படுவோம் என மாவட்டச் செயலாளர்கள் உறுதி அளித்ததாகச் சொல்லப்படுகிறது.



இப்படியான சூழலில் கரூர் கூட்ட நெரிசல் வழக்கு தொடர்பாக சிபிஐ விசாரணைக்கு ஆஜராக இன்று (மார்ச் 14) விஜய் டெல்லி செல்கிறார். நாளை அவரிடம் விசாரணை நடைபெற உள்ள நிலையில், ஒருநாள் முன்னதாகவே அவர் டெல்லி செல்வது அரசியல் வட்டாரத்தில் பெரும் விவாதத்தைக் கிளப்பியுள்ளது. இன்று இரவு டெல்லி ஹோட்டலில் தங்கும் விஜய், பாஜக தேசியத் தலைவர்களை ரகசியமாகச் சந்தித்துப் பேசக்கூடும் என்றும் கூறப்படுகிறது. அப்படியான சந்திப்புகள் நடந்தால் கிட்டத்தட்ட பாஜக அணியில் தவெக இணைவது உறுதியாகி விடும்.

# "எங்கள் சித்தாந்தங்கள் வெவ்வேறானவை, ஆனால்..." தவெக தலைவர் விஜய் குறித்து அண்ணாமலை விவரிப்பு

கோவை: "விஜய் குறித்த என் கருத்தில் எந்த மாற்றமும் இல்லை. நாங்கள் வேறு சித்தாந்தம். அவர்கள் வேறு சித்தாந்தம். இருப்பினும் அரசியல் கூட்டணிக்குள் முரண்பாடான கட்சிகள் உண்டு. பொது எதிரியை வீழ்த்த ஒன்று சேர்ந்தது உண்டு. தமிழகத்தில் திமுக ஆட்சியை தூக்கி எறிய வேண்டும் என்பதில் நாங்கள் தெளிவாக உள்ளோம்" என்று பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

மேலும், "கரூர் விவகாரத்தில் மடியில் கனமிருப்பதால் செந்தில் பாலாஜி சிபிஐ விசாரணைக்கு பதறுகிறார்" என்று அவர் கூறினார்.

அவர் இன்று கோவையில் செய்தியாளர்களிடம் கூறியது: "விளாத்திக்குளத்தில் 17 வயது சிறுமிக்கு நடந்த கொடூர சம்பவத்துக்கு இன்னும் தீர்வு கிடைக்கவில்லை. புகார் தெரிவித்த உடனேயே, போலீஸார் விசாரித்து நடவடிக்கை எடுத்திருந்தால் சிறுமி உயிரிழப்பை தடுத்திருக்கலாம். இது காவல் துறையின் தோல்வி என்பதை விட, அத்துறையை நிர்வகிக்கும் முதல்வரின் முழு தோல்வியாகும். முதல்வர் வெட்கி தலை குனிய வேண்டும். ஆட்சியாளராக தோல்வியுற்றேன் என்பதை முதல்வர் ஒப்புக் கொள்ள வேண்டும்.

கேன் எடுத்துச் சென்று பெட்ரோல் பிடித்த நிலை தமிழ்நாட்டை தவிர, நாட்டில் வேறு எங்கேயும் நடக்கவில்லை. அதற்கு இங்குள்ள அரசியல்வாதிகள் பீதியை கிளப்பி விட்டதால், மக்களுக்கு பயம் வந்ததே காரணம். இந்த விவகாரத்தில் எந்த பிரச்சினையும் இல்லை என பிரதமரே தெளிவுபடுத்திவிட்டார்.

நேச்சுரல் கேஸ் கன்ட்ரோல் ஆர்டர் 9ம் தேதி மத்திய அரசு வெளியிட்ட பிறகு, எல்.பி.ஜி. உள்நாட்டு உற்பத்தி 28 சதவீதம் அதிகரித்துள்ளது. ஹார்முஸ் நீரிணை வழியாக 2 கப்பல்கள் இந்தியாவுக்கு வந்துள்ளது. இது வெளியுறவுத் துறையின் கொள்கைக்கு கிடைத்த வெற்றி. உலகம் முழுவதும் பெட்ரோல் விலை ஏற்றப்பட்டுள்ளது. ஆனால், இந்தியாவில் எந்த பிரச்சினையும் இல்லை.

நாடாளுமன்றத்தில் சம்பந்தமே இல்லாத பிரச்சினையை ராகுல் காந்தி எடுக்கிறார். நாடாளுமன்ற நுழைவாயிலில் அமர்ந்து போராட்டம் நடத்தி நாடாளுமன்ற மாண்பை கெடுத்துள்ளனர்.

சட்டம் ஒழுங்கு குற்றங்கள் குறித்த உள்துறை செயலாளர் அளித்த அறிக்கை தவறானது. திமுக அரசு அதிகாரிகளை தவறாக பயன்படுத்துகின்றனர்.

என்டிஏ கூட்டணியில் சேர விருப்பம் தெரிவித்து உள்ளனரா என நீங்கள் தவெக தலைவர், பொதுச் செயலாளரிடம் தான் கேட்ட வேண்டும். இன்றைய சூழலில் எங்களது கூட்டணி பலமாக உள்ளது. யாரையும் எதிர்பார்த்து, எங்கள் கூட்டணி இல்லை. நாங்கள் வலுவாக, பலமாக எங்களது பாதையில் செல்கிறோம்.

திமுக கூட்டணியில் விசிக, கம்யூனிஸ்ட்கள் அசமாதான நிலையில் உள்ளனர். திமுக கூட்டணிக்குள் சலசலப்புகள் எழுந்துள்ளன.

தமிழக அரசியல் களத்தில் தேர்தல் நெருங்கும் நேரத்தில் ட்விஸ்ட் இருக்கும். இந்த முறையும் அதை எதிர்பார்ப்போம். நாங்கள் எங்களது டைம் லைனில் சரியாக செல்கிறோம்.




கரூர் விவகாரம் தொடர்பாக சிபிஐ விசாரணை கேட்டது தவெக. சிபிஐ அமைப்பை வைத்து தவெகவை பயமுறுத்துகின்றனர் என்பதை ஏற்க முடியாது. ஜனநாயகன் பட விவகாரம் தயாரிப்பு நிறுவனத்துக்கும், சான்றிதழ் வழங்கும் நிறுவனத்துக்கும் இடையே உள்ள பிரச்சினை.

முதல்வரின் கவனம் சட்டம் ஒழுங்கு, தமிழக நலனில் இல்லை. ரீல்ஸ் போடும் முதல்வராக மாறிவிட்டார்.

கரூர் விவகாரம் தொடர்பாக சிபிஐ அதிகாரிகள் விசாரணைக்கு செந்தில் பாலாஜியை அழைத்துள்ளனர். அவரை அழைத்து விசாரிக்க வேண்டியது சிபிஐ கடமை. சிபிஐ செந்தில் பாலாஜியை அழைப்பது சரியானது. அவர் மடியில் கனமிருப்பதால் பதறுகிறார். மடியில் கனம் இல்லை என்றால் சென்று பேச வேண்டியதுதானே. சிபிஐ விசாரணைக்கு செந்தில் பாலாஜி ஒத்துழைக்க வேண்டும்.

விஜய் குறித்த என் கருத்தில் எந்த மாற்றமும் இல்லை. நாங்கள் வேறு சித்தாந்தம். அவர்கள் வேறு சித்தாந்தம். இருப்பினும் அரசியல் கூட்டணிக்குள் முரண்பாடான கட்சிகள் உண்டு. பொது எதிரியை வீழ்த்த ஒன்று சேர்ந்தது உண்டு. தமிழகத்தில் திமுக ஆட்சியை தூக்கி எறிய வேண்டும் என்பதில் நாங்கள் தெளிவாக உள்ளோம்.

திமுக ஆட்சிக்கு வந்த பின்னர்தான் அரசு இயந்திரம் செயலிழந்து, குற்றங்கள் அதிகரித்துள்ளன. திமுக தலைவர்கள் எதையோ சாதித்தது போல், தேர்தலில் வெற்றி பெற்றது போல் உள்ளனர். இதுதான் அவர்களின் அழிவுக்கு அஸ்திவாரம். அவர்களின் ஆணவம், அகங்காரத்தை மக்கள் ஏற்க மாட்டார்கள்.

முதல்வர் ஸ்டாலின் திமுக கூட்டங்களுக்கு தான் செல்கிறார். இன்னும் மக்களை சந்திக்கவில்லை. மக்களை சந்திக்க செல்லும்போது, மக்களின் எதிர்ப்பு முதல்வருக்கு தெரியவரும்.

கேரளாவில் காங்கிரஸ் கட்சியினர் குழப்பத்தில் உள்ளனர். அங்கு 2026 தேர்தலில் பாஜக பெரும் சக்தியாக வரும். தமிழகத்தில் பழனிசாமி முதல்வராக வர வேண்டும் என பிரதமர் கூறியுள்ளார். இன்றைய சூழலில், தமிழகத்துக்கு 2026 க்கான தேவை பழனிசாமி. எங்கள் கூட்டணியின் முதல்வர் வேட்பாளர் அவர். அவரை வெற்றி பெற வைக்க நாங்கள் பாடுபடுகிறோம்" என்று அவர் கூறினார்.

# 'அதிமுக கூட்டணிக்கு தவெக சென்றால்..?' சீமான் ரியாக்ஷன்

திருச்சி: "என் வாக்காளர்கள் யார் எனத் தெரிந்துகொண்டே அதிமுக கூட்டணிக்கு தவெக சென்றால் எங்களுக்கு பாதிப்பு வருமா என கேட்கிறீர்கள்.பாதிப்புக்கு பயந்து நிற்பவன் ஒரு போர்வீரனாக இருக்க முடியுமா?" என்றார் நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்.




திருச்சி விமான நிலையத்தில் அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறியது: "தமிழகத்தில் கடந்த 15 நாட்களுக்குள் பல்வேறு கொலைகள், பாலியல் வன்முறை சம்பவங்கள் நடந்துள்ளன. 6 வயது குழந்தையிலிருந்து 60 வயது முதியவர்களுக்குக் கூட பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற தொடர் குற்றச் செயல்கள் அதிகரிப்பு சமூகத்தின் ஒழுக்க சீர்கேட்டுக்கு காரணமாகிறது. குற்றங்களில் ஈடுபடுபவர்களில் பெரும்பாலானோர் மதுபோதையில் உள்ளது கவலைக்குரியது. இதைத் தடுப்பதற்கு அரசுக்கு மட்டுமல்ல, சமூகத்துக்கும் பொறுப்புள்ளது.

சாதி அரசியலாக மாறி அதிகாரத்துக்கு வந்தால் சமத்துவம் அழியும். மதம் அரசியலாக மாறினால் மனிதம் அழியும். பணம் அரசியலாக மாறினால் பண்பாடு மற்றும் ஒழுக்கம் அழியும். நல்ல ஒழுக்கம் மற்றும் அறநெறி கொண்ட சமூகத்தை உருவாக்க அனைவரும் உறுதி ஏற்க வேண்டும்.

எதிர்காலத்தில் பத்திரமாக நம் குழந்தைகளை இந்த பூமியில் விட முடியுமா என்ற ஐயம் எழுகிறது. ஆட்சியாளர்கள் தவறு செய்கிறார்கள் என்றால் ஆட்சியாளர்களை தேர்வு செய்த மக்களும் பொறுப்பேற்க வேண்டும்.

தொடர்ந்து 60 ஆண்டுகளாக தவறு செய்யும் ஆட்சியாளர்களையே தேர்வு செய்து, இதே அதிகாரங்களே நிறுவப்பட்டு வந்தால் என்ன மாற்றம் நிகழும்?

தவெக தலைவர் விஜய்க்கு சிபிஐ சம்மன் குறித்து கருத்து கூற விரும்பவில்லை.

அரசியலில் மாற்றம் வரவேண்டும் என்ற நோக்கத்தில்தான் அனைவரும் கட்சி தொடங்குகிறார்கள். அந்த வகையில் புதிய கட்சி தொடங்கி உள்ள சசிகலாவுக்கு வாழ்த்துகள்.

கட்சி மாறி வாக்களிக்கும் அச்சம்: கர்நாடகாவுக்கு 8 எம்எல்ஏவை

அமெரிக்க ராணுவ விமானம் இராக்கில் விழுந்து சிதறியது: 4 பேர் உ

உரம் தட்டுப்பாடு இல்லை: நிர்மலா சீதாராமன் பதில்

'கோட்டை' தொகுதி களேபரம் | உள்குத்து உளவாளி

கொலை வழக்கில் பாஜக எம்எல்ஏக்கு நிபந்தனை ஜாமீன்

தனியார்மயம், தாராளமயம், உலகமயத்தை ஏற்றுக் கொண்ட நாட்டில் இருந்து கொண்டு தனியார்மயத்துக்கு எதிராக திமுக போராடுவதாக கூறுவது வேடிக்கை. தனியார்மயத்துக்கு கையெழுத்து போட்டதே திமுக தான். தூய்மைப் பணியாளர், கல்வி, மருத்துவம், போக்குவரத்து உள்ளிட்ட பல துறைகள் ஏற்கெனவே தனியார்மயமாகிவிட்டன. சாரயக்கடை தான் அரசிடம் உள்ளது.

ஈரான் மீது இஸ்ரேல் போடும் குண்டை விட திமுக தனியார்மயத்துக்கு எதிராக போராடும் என்பது பெரும் குண்டாக இருக்கிறது.

பெரிய பொருளாதார பின்னணி இல்லாத எளிய பிள்ளைகளான நாங்கள் முன்கூட்டியே ஓடத் தொடங்க வேண்டும். அவர்கள் செய்தித்தாள்களில் முன்பக்கம் விளம்பரம் கொடுப்பர். எங்களுக்கு அதற்கு வசதியில்லை. எனவே முன்கூட்டியே வாக்காளர்களை சந்தித்து அரசியல் நிலைப்பாடுகளை விளக்கி வருகிறோம்.

தமிழர் நலனுக்காக நடத்தப்படும் போராட்டங்கள் மக்களிடம் சென்று சேர வேண்டும் என்றும், அதை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பொறுப்பு ஊடகங்களுக்கு உள்ளது. உலக நாடுகள் தலையிட்டு ஈரான் ஙு இஸ்ரேல் போரை நிறுத்த வேண்டும்.

என் வாக்காளர்கள் யார் எனத் தெரிந்து கொண்டே அதிமுக கூட்டணிக்கு தவெக சென்றால் எங்களுக்கு பாதிப்பு வருமா என கேட்கிறீர்கள். பாதிப்புக்கு பயந்து நிற்பவன் ஒரு போர்வீரனாக இருக்க முடியுமா?

குடும்பத் தலைவிக்கு ரூ.2,000 தருவேன் என்கின்றனர். நான் கூட மாதம் மாதம் ரூ.50,000 தரலாம் என நினைக்கிறேன். எதையாவது சொல்லிவிட்டு போக வேண்டியதுதான்" என்றார் சீமான்.


